# இறந்தவர்களைப் புதைப்பதில் மலையகமக்கள் எதிர்நோக்கியசிக்கல்கள் : மலையகச்சிறுகதைகளைமையப்படுத்திய ஓர்ஆய்வு

**எஸ்.நிஷாந்தினி[1],எம்.யு.எப்.றிப்தா[2], வி.சிவசங்கரி[3]**
[1,2,3]மொழித்துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
nishaseu512@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:** பிரித்தானியப் பேரரசின் ஆட்சியின் கீழ் அடிமைநாடாகவிளங்கிய இந்தியாவிலிருந்து 1824ஆம் ஆண்டுகாலப்பகுதியில் இலங்கைக்குதொழிலாளர்கள் அழைத்துவரப்பட்டனர். இவ்வாறுகுடிபெயர்ந்துவந்தவர்களேமலையகமக்கள்,மலையகத் தமிழர், இந்தியவமசாவழித் தமிழர் போன்றபெயர்களால் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் இலங்கையில் மலையக இலக்கியம் எனும் புதியதொரு இலக்கியத் தோற்றத்திற்குகாரணமாகினர். முலையகமக்களின் பண்பாட்டு அம்சங்களையும் வாழ்வியலையும் அடையாளப்படுத்துவதாக ஆரம்பகால கவிதை முயற்சிகளும் (கும்மி, தெம்மாங்கு, சிந்து) அதனைத் தொடர்ந்து கட்டுரை, சிறுகதை, நாவல் போன்றனவும் விளங்குகின்றன. மலையக மக்களையும் அவர்களதுவாழ்வியல் பிரச்சினைகளையும் அவலங்களையும் யதார்த்தபூர்வமாக வெளிப்படுத்துவதில் சிறுகதைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. அந்தவகையில் மலையகச் சிறுகதைகள்,உழைக்கப் பிறந்தவர்கள்ஆகியசிறுகதைத் தொகுதிகள் சிறப்பாகநோக்கப்படுகின்றன. இத்தொகுதிகளுள் உள்ளடங்கும் சிறுகதைகள் மலையக மக்கள் எதிர்கொண்டஅரசியல், சமூக, பொருளாதாரரீதியான பல்வேறு வாழ்வியல் பிரச்சினைகளை சித்திரிப்பதாக அமைந்துள்ளன. குறிப்பாக, பிரஜாவுரிமை, இனக்கலவரம், தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டமை, காணிகள் பறிமுதல் செய்யப்பட்டமை, அரசியல் பிரதிநிதித்துவம், வறுமை, குடும்பத் திட்டமிடலின்மை, கல்வி வசதியின்மை, சுகாதார பிரச்சினை ,பாலியல் ரீதியான கொடுமைகள், குடிப்பழக்கம், உழைப்புச் சுரண்டப்படல், வர்க்கவேறுபாடு, காலநிலை மற்றும் போக்குவரத்து எனப் பலவாறு பிரச்சினைகள் எடுத்துரைக்கப்படுகின்றமையை அவதானிக்கலாம். இத்தகைய பிரச்சினைகளை மலையக இலக்கியங்கள், கட்டுரைகள், ஆய்வுகள் போன்றன முக்கிய பிரச்சினைகளாக எடுத்துரைக்கின்ற நிலை காணப்படுகின்றது. இந்நிலையில், இறந்தவர்களைப் புதைப்பதில் மலையகமக்கள் எதிர்நோக்கிய சிக்கல்களை முக்கிய சமூக பிரச்சினையாக சிறுகதைகள் மூலமாக எடுத்துக்காட்டப்படுகின்றமையை அவதானிக்கலாம். இருப்பினும் இது குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படாத நிலையே காணப்படுகின்றது. மலையகச் சிறுகதைகள்,உழைக்கப் பிறந்தவர்கள்ஆகியசிறுகதைத் தொகுதிகளில் இடம்பெறும் ‘குமரிக்காடு’,‘நமக்கென்றொருபூமி’,‘மையத்து’,‘தியாகபூமியிலே’,‘மொய்க்காசு’,‘அம்மாசி இலங்கைபிரஜையானான்’போன்ற சிறுகதைகளில் மேற்குறித்தபிரச்சினை இழையோடியுள்ளமையை அவதானிக்கலாம். அந்தவகையில் இந்தசிறுகதைகளைஅடிப்படையாகக் கொண்டு இறந்தவர்களைப் புதைப்பதில் மலையகமக்கள் எதிர்நோக்கிய சிக்கல்களை எடுத்துக்கூறுவதே இவ்வாய்வின் நோக்கமாகும். ஆய்வுநோக்கத்தை அடைந்துகொள்ளும் பொருட்டுவிளக்கமுறை, சமூகவியல் ஆய்வுமுறைகள் கையாளப்பட்டுள்ளன. இதன் பொருட்டு ‘மலையகச் சிறுகதைகள்’,‘உழைக்கப் பிறந்தவர்கள்’ஆகியசிறுகதைத் தொகுதிகள் இரண்டாம் நிலைத் தரவுகளாக பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வுடன் தொடர்புடைய ஏனைய ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையதளசெய்திகள், பிறஆக்கங்கள் என்பன இவ்வாய்வின் துணைத்தரவுகளாக அமைகின்றன. இறுதியாக இவ்வாய்வானது அரசியல், பொருளாதார,சமூகரீதியாகமலையகமக்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளை எடுத்துரைக்கும் சிறுகதைகளில் இறந்தவர்களைப் புதைப்பதில் அவர்கள் எதிர்நோக்கிய சிக்கல்களை முக்கிய பிரச்சினையாக எடுத்துக்காட்டுவதையும் அப்பிரச்சினையின் அடிப்படையில் தோன்றிய விளைவுகளை எடுத்துரைப்பதும் இதற்குப் பின்னணியாக அமைந்த காரணங்களை எடுத்துரைப்பதும் இவ்வாய்வின் முடிவாக அமையும்.

**திறவுச் சொற்கள்** : மலையகமக்கள், இறந்தவர்களைப் புதைத்தல், பிரச்சினைகள், மலையகச் சிறுகதைகள், உழைக்கப் பிறந்தவர்கள்

## அறிமுகம்

மலையகசமூகத்தினைஅடிப்படையாகக் கொண்டு தோன்றிய இலக்கியங்களிலே சிறுகதைகள் ,மலையக வாழ்க்கை முறையின் நடப்பியலைகளமாகக் கொண்டு தோன்றியவைகளாகும். இத்தகையசிறுகதைகள் சமூகபிரச்சினைகளைகளமாகக் கொண்டு படைக்கப்பட்ட அதேவேளை தனிமனிதஉறவுகள்,தனிமனித இயலாமை, பிரச்சினைக்குரியமனிதவாழ்வின் மிகநுண்ணியபகுதிகள் போன்றவற்றை அடையாளங்கண்டு சித்திரிக்கக்கூடியவகையிலும் படைக்கப்பட்டுள்ளன. இந்தியவிலிருந்து இலங்கை பெருந்தோட்டங்களுக்கு அழைத்துவரப்பட்டமக்கள் தங்களதுவாழ்வில் எதிர்கொண்டபிரச்சினைகள் ஏராளம். அவற்றை அரசியல்,சமூகபிரச்சினைகள் என்றஅடிப்படையில் நோக்கும் நிலைகாணப்படுகின்றது.

அரசியல் பிரச்சினைகளாகபிரஜாவுரிமை, சிறிமா–சாஸ்திரிஒப்பந்தம், இனக்கலவரம், தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டமை, காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டமை,அரசியல் பிரதிநிதித்துவம் போன்றனவும் சமூகபிரச்சினைகளாகவறுமை,குடும்பத் திட்டமிடலின்மை, பொருளாதார நிலைப்பாடு, கல்வி வசதியின்மை, சுகாதாரவசதியின்மை,பாலியல் ரீதியான கொடுமைகள், குடிப்பழக்கம், உழைப்புச் சுரண்டப்படல், வர்க்கவேறுபாடு, காலநிலை மற்றும் போக்குவரத்து போன்றனவும் நோக்கப்படுகின்றன.

இறப்புஎன்பதுஒருஉயிரினத்தின் முடிவு. எந்தவொரு உயிரினமாயினும் சரி ஒருபொருளாயினும் சரி மரணத்தைக் கட்டாயம் சந்தித்தேதீரும். அதிலிருந்துயாரும் எதுவும் தப்பமுடியாது. கடவுள் இயற்கையின் வடிவில் மனிதனைபயணிக்கவைக்கும் கடைசி அஸ்திரமாகும். இறப்பின் பின் உறவுகளையும் தொடர்புகளையும் பிரிந்துதனியேசெல்லும் உடலுக்கென்று ஓர் இடம் தேவை. இத்தேவையின் பொருட்டுஆரம்பகாலம் முதல் பல்வேறுபிரச்சினைகள் இடம்பெற்றுவந்துள்ளன. அவற்றுள் குறிப்பாக இடப்பற்றாக்குறை, இன ரீதியானபிரச்சினை, மதரீதியானபிரச்சினை, வர்க்கவேறுபாட்டு பிரச்சினை போன்றவற்றை குறிப்பிடலாம். இந்த அடிப்படையில் இறந்தவர்களைப் புதைப்பதில் மலையகமக்கள் எதிர்நோக்கியசிக்கல்கள் தொடர்பில் ‘மலையகச் சிறுகதைகள்’,‘உழைக்கப் பிறந்தவர்கள்’ஆகியசிறுகதைத் தொகுதிகளில் இடம்பெறும் சிறுகதைகள் எடுத்துரைப்பனவாக இடம்பெற்றுள்ளன.

## பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்

இறந்தவர்களைப் புதைப்பதில் மலையகமக்கள் எதிர்நோக்கிய சிக்கல்கள் மலையகசிறுகதைகளில் எடுத்துரைக்கப்பட்டிருப்பதைபின்வருமாறுநோக்கலாம்.

1. இறந்தவர்களைப் புதைப்பதில் மலையகமக்கள் எதிர்நோக்கிய சிக்கல்களைக் கூறும் சிறுகதைகளை அடையாளப்படுத்தல்.
2. இறந்தவர்களைப் புதைப்பதில் மலையகமக்கள் எதிர்நோக்கிய சிக்கல்களின் விளைவுகள்.
3. இறந்தவர்களைப் புதைப்பதில் மலையகமக்கள் எதிர்நோக்கிய சிக்கல்களுக்கான பின்னணி.

### 1. இறந்தவர்களைப் புதைப்பதில் மலையகமக்கள் எதிர்நோக்கியசிக்கல்களை அடையாளப்படுத்தல்.

இறந்தவர்களை புதைப்பதில் மலையக மக்கள் எதிர்நோக்கிய சிக்கல்களைக் கூறும் சிறுகதைகளாக குமரிக்காடு, நமக்கென்றொரு பூமி, மொய்க்காசு போன்றன மலையகச் சிறுகதைகள்எனும் சிறுகதைத் தொகுதியிலும் மையத்து, தியாக பூமியிலே, காளிமுத்துவின் பிரஜாவுரிமை, அம்மாசி இலங்கை பிரஜையானான் போன்றன உழைக்கப் பிறந்தவர்கள் எனும் சிறுகதைத் தொகுதியிலும் அமைந்துள்ளன.

'தியாக பூமியிலே' எனும் சிறுகதையானதுமலையக மக்களை நோக்கி மேற்கொள்ளப்பட்ட இனக்கலவர நடவடிக்கைகளின் கொடூரமான தன்மைகளையும் இன ரீதியான தாக்குதல்களையும் எடுத்துரைப்பதனை பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது. இருப்பினும் பின்வரும் பகுதியினூடாக அவதானிக்கையில் இச்சிறுகதையானது இறந்தவர்களை புதைப்பதில் மலையக மக்கள் எதிர்கொண்ட சிக்கல்களை அடையாளப்படுத்துவதாக அமைவதை காணக்கூடியதாக உள்ளது.

"மே…! மெத்தன கிசி கலபல ஓனநே… மமதமய் அவசரதுன்னே…! அவர் அங்கு நின்ற காடையர்களிடம் தன்னுடைய மொழியிலேயே பேசினார்.

ஆரச்சி மாத்தயா! மே இடம் வென்கரல்லா தியென்னே அபே கொலனி மினிசுண்ட போல பிட்டனியட்ட…! காடையர்களில் இன்னொருவன் கூறினான். ஆராச்சிக்கு கோபம் வந்துவிட்டது.

…மே…! கங்காணி! நீங்க இத சுருக்கா பொதச்சி போடுங்க.. நாங் இங்கன நிக்கறது…இவங்க என்ன செய்யுறது பாப்பம்…- என்று கூறவும் முத்தையா கங்காணி அவசரப்படுத்தினார்."[1]

மலையகத் தமிழர்களை மிக மோசமாக பாதித்த சட்டமாகவே 1948ஆம் ஆண்டு இலங்கை பாராளுமன்றம் நிறைவேற்றிய குடியுரிமைச்சட்டம் அல்லது பிரஜாவுரிமைச்சட்டம் விளங்குகிறது. இச்சட்டத்தினால் பத்து இலட்சம்பேர் குடியுரிமை மறுக்கப்பட்டு நாடற்றவர்களாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இப்பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டே 'காளிமுத்துவின் பிரஜாவுரிமை' சிறுகதை அமைந்துள்ளது. இச்சிறுகதையிலும் மேற்குறித்ததொரு நிலை காணப்படுவதனை அவதானிக்க முடிகிறது.

"அவர்கள் ஆவலோடு ஓடிப்போய் அதை எடுத்துப் பார்த்தார்கள். அது ஒரு மனித பிரேதத்தின் கை எலும்பு.

ஐயா துரைமார்களே, இது என் பாட்டனாரின் கை எலும்பு. எத்தனையோ வருடங்களுக்கு முன்னே அவர் இங்கு புதைக்கப்பட்டவர். என்னை இலங்கைப் பிரஜையாக்க உங்களுக்கு இந்த அத்தாட்சி போதவில்லை என்றால் - என்னை இந்தக் குழியிலே வைத்து உங்கள் கையினாலேயே மண் தள்ளிவிட்டு புதையுங்கள்"[2]

இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கென பொருத்தமான அதேவேளை பொதுவான இடம் ஒதுக்கப்படாமையானது பாரிய பிரச்சினையாகவே அமைந்தது. இப்பிரச்சினையை 'நமக்கென்றொரு பூமி' சிறுகதை பின்வருமாறு சித்திரிக்கிறது.

"பரம்பரை பரம்பரையாகத் தேயிலைத் தோட்டத்தையே தங்கள் உலகமாக்கிக் கொண்டு அதற்குள்ளேயே வாழ்ந்து உழைத்து வந்தவர்களுக்கு இன்று செத்த பின்னர் எங்கே புதைப்பது என்றாகிவிட்டது. உழைப்பவர்க்கு உலகமே மண்டியிடும் என்று ஆங்காங்கே மேடையில் முழங்குகிறார்கள். கேட்க இனிமையாக இருக்கிறது. ஆனால் இங்கே இந்தத் தோட்டத்தில் உழைத்து அங்கேயே செத்தவர்களைப் புதைப்பதற்கு இடம் தேட வேண்டி இருக்கிறது. …தேயிலைத் தூருக்கே ஒழைச்சி ஓடாகிப்போன கெழவிக்கு இதே தேயிலைத் தோட்டத்தில் பொதைக்கக் காணி இல்லியாமே. இது அநியாயமுங்க"[3]

இறந்தவர்களை புதைப்பதற்கான மயானம் என்று தனியான இடம் வழங்கப்படாத நிலையில் தேயிலைத் தோட்டங்களுக்கே உரமாக அம்மக்கள் புதைக்கப்படுவது வழக்கமாகிவிட்டது. இவ்வாறான வழக்கத்தை ஷஅம்மாசி இலங்கை பிரஜையானான்' சிறுகதை பின்வருமாறு எடுத்துரைக்கிறது.

"பாடைமாத்தி என்னு ஒன்னு இல்லை சாமி. தோட்டத்திலே றோட்டு ஓரமா தேயிலைச் செடிக்குப் பக்கத்திலே ஆறடி நிலத்தை குழியாவெட்டி அடக்கம் பண்ணிப்புடுவம். மற்றவங்களும் அதுக்குப் பக்கத்திலை குழியை வெட்டுவாங்க. இப்படியே தாங்க சுடலையாகுது. நாங்க உசிரோடை இருக்கிறபோதும் தேயிலையோடை தானுங்க சாகிறம். செத்த பிறகும் தேயிலைச் செடிகளுக்கிடையிலை புதைஞ்சு அதுக்கே உரமாகிறோமுங்க"[4]

சடலத்தை அடக்கம் செய்வதற்கான நிலமில்லாமை ஒரு பிரச்சினையாக உருவெடுத்த அதே கணம் சடலத்தை அடக்கம் செய்வதற்கும் புதை நிலம் பெறுவதற்கும் தோட்டத்து அதிகாரிகளிடம், ஊரின் தலைவர்களிடம் அனுமதி கடிதம் பெறுவதென்பது மறு பிரச்சினையாக காணப்பட்டது. ஷமொய்க்காசு' சிறுகதையிலே இடம்பெறும்,

"மருதை கங்காணியின் மகன் ராசுக்கண்ணு இறந்து ஐந்து நாட்களாகிவிட்டன. இன்று தான் பிணத்தை அடக்கம் செய்ய அனுமதித்திருந்தார்கள்"[5] என்ற பகுதி அத்தகைய நிலையை விளக்குகின்றது.

முறையற்ற வகையிலும் இனம் மாறியும் திருமணம் செய்கின்ற காரணத்தால் சமய நிலைகளைக் கூறி இறந்தவர்களை அடக்கம் செய்யவிடாது பிரச்சினைகளை ஏற்படுத்துகின்ற போக்கும், இறந்தவர்களுக்கான புதை நிலம் வழங்காமல் தடுப்பதுமாகிய நிலை மலையக பிரதேசங்களிலே காணப்பட்ட தன்மையை ஷமையத்து' சிறுகதை பின்வருமாறு எடுத்துரைக்கிறது.

"இரண்டு நாட்களாகியும் மையத்தை அடக்கம் செய்யவிடாது, கத்தீபு மீதும் கபுறுஸ்தான் மீதும் தடை உத்தரவு செய்த ஊர்ப் பள்ளிவாசல் மத்திஸம் - தர்ம கர்த்தாக்கள் சபையின் நடவடிக்கையும் ஊர் மக்களின் சமயாவேசமும் எல்லாமாக அந்த ஆரம்ப வேதனையை எங்கோ துரத்தித் தேசப்பிரஷ்டம் செய்துவிட்டது. மடிந்துவிட்ட புருஷனின் எலும்புக்கூடு நிம்மதியாகப் படுத்துக்கிடக்க ஒரு எட்டு சாண் கபுறு நிலப் பிரச்சனைதான் வேதனையாக விஸ்வரூபமெடுத்து நின்றது."[6]

இவ்வாறு இறந்தவர்களை புதைப்பதற்காக சிறிய இடத்தை வழங்காது நிகழும் போராட்டங்களும் அதனால் விளையும் சிக்கல்களும் இறந்த பின் அவர்களது மதிப்பும் மரியாதையும் இழந்ததொரு தன்மையினை எடுத்துக்காட்டுவதாக அமைவதனையும் அவதானிக்கலாம்

**2. இறந்தவர்களைப் புதைப்பதில் மலையகமக்கள் எதிர்நோக்கியசிக்கல்களுக்கானபின்னணி.**

இறந்தவர்களை புதைப்பதற்கென தனியான, பொதுவான இடம் ஒதுக்கப்படாமையும் வழங்கப்படாமையும், இறந்தவர்களுக்கான இறுதிச்சடங்குகளை முறையாக செய்யவிடாது தடுக்கின்றமை, உரிய காலத்திற்குள் இறந்தவர்களின் உடலை மயானத்திற்கு கொண்டுச் செல்ல அனுமதிக்காமை என பலவாறு பிரச்சினைகள் உருவெடுத்தமையின் பின்னணியில் பிரஜாவுரிமை பிரச்சினை, இனக்கலவரம்,தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டமை, காணி பகிர்ந்தளிக்கப்பட்டமை, வர்க்க உணர்வு போன்ற அரசியல், சமூக பிரச்சினைகளே பின்னணியாக அமைந்தன எனலாம்.

கடின உழைப்பிற்கும் கொடிய வறுமைக்கும் மத்தியில் சுழன்ற மலையகத் தொழிலாளர்களை இந்தியாவிற்கு திருப்பியனுப்பவும் இலங்கையில் அவர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லாமல் செய்வதற்கும் பல்வேறு அரசியல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த அடிப்படையிலே

1948ஆம் ஆண்டு இலங்கை பாராளுமன்றம் நிறைவேற்றிய பிரஜாவுரிமைச்சட்டம் விளங்குகிறது. இச்சட்டத்தினால் பத்து இலட்சம்பேர் குடியுரிமை மறுக்கப்பட்டு நாடற்றவர்களாக்கப்பட்டனர்.

பிரஜாவுரிமையை இழந்த மலையக மக்களுக்கு வாக்குரிமையும் மறுக்கப்பட்டது. இதன் காரணமாக அரசாங்க தொழில் வாய்ப்புகள், கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் முதலிய துறைகளிலான வாய்ப்பு வசதிகள் கைகூடாத நிலையிலேயே காணப்பட்டதோடு இறந்தவர்களை புதைப்பதற்கான அனுமதியும் உரிய இடம் வழங்கப்படாத நிலையும் காணப்பட்டது.

"பரம்பரை பரம்பரையாகத் தேயிலை தோட்டத்தையே தங்கள் உலகமாக்கிக் கொண்டு அதற்குள்ளேயே வாழ்ந்து உழைத்து வந்தவர்களுக்கு இன்று செத்த பின்னர் எங்கே புதைப்பது என்றாகிவிட்டது. உழைப்பவர்களுக்கு உலகமே மண்டியிடும் என்று ஆங்காங்கே மேடையில் முழங்குகிறார்கள். கேட்க இனிமையாகத் தான் இருக்கிறது. ஆனால் இங்கே இந்தத் தோட்டத்தில் உழைத்து அங்கேயே செத்தவர்களைப் புதைப்பதற்கு இடம் தேட வேண்டியிருக்கிறது."[7]என்ற பகுதி மேற்குறித்த தன்மையை தெளிவுப்படுத்துகின்றது.

பிரஜாவுரிமைப் பிரச்சனைகளைத் தொடர்ந்து 1977, 1981, 1983, 1995 ஆகிய ஆண்டுகளை பிரதான எல்லைகளாகக் கொண்டு மலையக மக்களை நோக்கி கொடூரமான இனக்கலவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1948, 1964ஆம் ஆண்டுகளில் மலையக மக்களின் குடியுரிமை சார்ந்த சட்டம், ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டு இலங்கை, இந்திய பிரஜாவுரிமை பெற்றவர்களுக்கு அப்பால் நாடற்றவர்கள் என்ற போர்வையிலும் சிலரை அடையாளப்படுத்த ஆரம்பித்தனர். நாடற்றவர்களாக, இலங்கை பிரஜாவுரிமை பெற்றவர்களாயிருந்த மலையக மக்கள் இனக்கலவர அடிப்படையில் அனுபவித்த துன்பங்கள் ஏராளம்.

இந்த நிலையிலேயே இன வெறியின் தாக்குதலாக புதைக்கப்பட்டவர்களின் சடலங்களைக் கூட புதைகுழியிலிருந்து எடுத்து வீசக் கூடிய மனநிலை உருவாகியிருந்தது. குறிப்பாக பெரும்பாண்மையினத்தவர்களால் மலையக மக்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்களில் பாரிய அநீதியாகவே இத்தன்மை நோக்கப்படுகிறது. இதனை கீழ்வரும் சிறுகதைப் பகுதி மூலம் அறியலாம்.

"அனைவரும் குழியை நெருங்கினார்கள். அங்கே…

குழி தோண்டப்பட்டுக் கிடந்தது. பிரேதப்பெட்டி உடைத்து எறியப்பட்டிருந்தது. அனைவரும் வாயடைத்துப் போய் ஓடிச்சென்று குழியை எட்டிப் பார்த்தனர். ஆண்டாண்டு காலமாக தனது உதிரத்தை வியர்வையாக்கி உழைத்த அந்தத் தியாக பூமிக்கு உள்ளே மருதை வீரன் தாத்தா அனாதையாகக் கிடந்தார்."[8]

1970ம் ஆண்டு தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டதைத் தொடர்ந்து நிலமற்ற வரிய மக்களுக்கு நிலம் பகிர்ந்தளிக்கப்படுவதாகக் கூறி தொடர்ந்தும் தோட்டத் தொழிலாளர் வேலை செய்து வந்த தோட்டங்களிலிருந்து அவர்களை விரட்டியடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் பின்னணியில் பிரஜாவுரிமை பிரச்சனை தாக்கம் செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

தேயிலைத் தோட்டங்கள் சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிப்பு செய்யப்பட்டமையால் மலையகத் தோட்ட தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரங்கள் சமூக, பொருளாதார ரீதியாக தடுக்கப்படும் நிலை உருவாகியது. இத்தகைய சூழ்நிலையில் மலையகத் தமிழ் தொழிலாளர்களுக்கு நிலம் வழங்கப்படாததனால் தோட்டப்புறங்களில் வெளியாட்களின் குடியேற்றமும் இனமுரண்பாடுகளும் உருவாகியமையானது பல்வேறு பிரச்சனைகளுக்கு வழிவகுப்பதாகவே அமைந்தது.

இந்த பின்னணியிலேயே இறந்தவர்களை புதைப்பதற்கு இடமின்றி தாங்கள் வசிக்கும் பகுதியை இடுகாடாக மாற்றும் நிலையும் அவர்கள் உழைப்பதற்கு வழிகாட்டிய தேயிலை காடுகளுக்கே மலையக மக்கள் உரமாகும் நிலையும் காணப்பட்டது. இந்நிலை அவர்களது இயலாமையினையும் உரிமையற்று வாழும் தரத்தினையும் இயல்பாக உணர்த்துகின்றது.

இத்தகைய நிலையை ஷஅம்மாசி இலங்கை பிரஜையானான்' சிறுகதை பின்வருமாறு எடுத்துக்காட்டுகின்றது.

"பாடைமாத்தி என்னு ஒன்னு இல்லை சாமி. தோட்டத்திலே றோட்டு ஓரமா தேயிலைச் செடிக்குப் பக்கத்திலே ஆறடி நிலத்தை குழியாவெட்டி அடக்கம் பண்ணிப்புடுவம். மற்றவங்களும் அதுக்குப் பக்கத்திலை குழியை வெட்டுவாங்க. இப்படியே தாங்க சுடலையாகுது. நாங்க உசிரோடை இருக்கிறபோதும் தேயிலையோடை தானுங்க சாகிறம். செத்த பிறகும் தேயிலைச் செடிகளுக்கிடையிலை புதைஞ்சு அதுக்கே உரமாகிறோமுங்க"[9]

திருமணம் தொடர்பில் தோன்றுகின்ற பாரிய பிரச்சனையாக சாதி, இனம் தாக்கம் செலுத்துகின்றது. இவ்வாறாக சாதி, இனம் மாறி திருமணம் செய்கின்றமை இறந்தவர்களை புதைப்பதிலும் பாரிய பிரச்சினையாக உருவெடுக்கும் நிலை காணப்படுகின்றது. குறிப்பாக இறந்தவர்களை புதைப்பதற்கு மத, இன ரீதியான நிறுவனத்தினூடாக அனுமதி வழங்காமை, சடலத்தை புதைப்பதற்கான இடம் வழங்காமை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தோன்றுகின்றன. இவை அதிகாரம் செலுத்துவதனூக இடம்பெற்றாலும் இறந்தவர்களை புதைப்பதில் மலையக மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினையின் அடிப்படையில் பார்க்கக் கூடியதாக அமைவது குறிப்பிடத்தக்கது.

"மஜீத் நானாவுடைய றூஹு பிரிந்த சமயத்தில் கணவனை இழந்து அனாதரவாய் விட்ட ஒரு பெண் பிறவியின் இயற்கையான வருத்தமும் துயரமும் அவளைச் சித்திரவதை செய்தன. பிரபஞ்சமே இருண்டு அஸ்தமித்து விட்ட விரக்தி. ....இரண்டு நாட்களாகியும் மையத்தை அடக்கம் செய்யவிடாது, கத்தீபு மீதும் கபுருஸ்தான் மீதும் தடை உத்தரவு செய்த ஊர்ப் பள்ளிவாசல் மத்திஸம் - தர்ம கர்த்தாக்கள் சபையின் நடவடிக்கையும் ஊர் மக்களின் சமயாவேசமும் எல்லாமாக அந்த ஆரம்ப வேதனையை எங்கோ துரத்தித் தேசப்பிரஷ்டம் செய்துவிட்டது. மடிந்துவிட்ட புருஷனின் எலும்புக்கூடு நிம்மதியாகப் படுத்து கிடக்க ஒரு எட்டு சாண் கபுறு நிலப் பிரச்சினைதான் வேதனையாக விஸ்வரூபமெடுத்து நின்றது.."[10]

இத்தகைய பிரச்சினைகளின் பின்னணியிலேயே மலையக மக்கள் இறந்தவர்களை புதைப்பதில் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கி வந்துள்ளனர்.

**முடிவுரை**

ஆரம்பகாலம் தொடக்கம் மலையகச் சிறுகதைகளின் கருப் பொருளாக மலையக மக்களின் தொடர் இன்னல்களும் பிரச்சினைகளும் அமைந்ததோடு, தனிமனித உணர்வுகளை சித்திரிக்கும் வகையில் காதல், நட்பு போன்ற அம்சங்களை அரசியல், பொருளாதார, வறுமை அடிப்படையிலான விடயங்களோடு இணைந்த வகையில் வெளிப்படுத்துகின்றன.

மலையக மக்களின் வாழ்வியல் அம்சங்களை அவர்களது பிரச்சினைகள் வாயிலாகவும் பல்வேறு சிறுகதைகளில் நேரடியாகவும் அவதானிக்க முடிகிறது. குறிப்பாக மலையக மக்களின் வருகையினூடாக ஆரம்பித்த பிரச்சினைகளிலிருந்து தொடர்ந்த பல்வேறு பிரச்சினைகளை அடையாளப்படுத்தியதுடன் காலங்கள் கடந்தநிலையிலும் மாற்றம் பெறாத வாழ்வியல் அம்சங்களை பல்வேறு கோணங்களிலும் சிறுகதைகள் சித்திரித்துள்ளன.

இந்த அடிப்படையில் பொதுவாக நோக்கும் போது அரசியல், சமூக பிரச்சினைகளை பிரதானப்படுத்தி பார்க்கும் நிலையில் அவற்றின் அடிப்படையில் ஏற்படும் இறப்பு ரீதியாக எதிர்கொள்ள வேண்டிய ஏராளமான பிரச்சினைகள் உருவாகியிருந்தன. இத்தகைய பிரச்சினைகளை'மலையகச் சிறுகதைகள்','உழைக்கப் பிறந்தவர்கள்'ஆகிய சிறுகதைத் தொகுதிகளில் இடம்பெறும் சிறுகதைகள் எடுத்துரைப்பனவாக இடம்பெற்றுள்ளமையை

அவதானிக்கலாம். அத்தகைய சிறுகதைகளில் பிரதானமாக அரசியல், சமூக ரீதியான பிரச்சினைகள் ஆழ்ந்து நோக்கப்பட்ட நிலையில்,இறந்தவர்களை புதைப்பதில் மலையக மக்கள் எதிர்நோக்கிய சிக்கல்கள் சமூக ரீதியாக தனித்து நோக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

இத்தகைய சூழ்நிலையின் விளைவால் மலையக மக்கள் தனித்துவிடப்பட்டு அவர்களுக்கான உரிமைகளும் உடைமைகளும் உரித்தாக்கப்படாத நிலையே காணப்பட்டது. இறந்தவர்களை புதைப்பதற்கு உரிய இடம் வழங்கப்படாது, சடலங்களை புதைப்பதற்கு முறையான அனுமதி வழங்கப்படாது, அவ்வனுமதி வழங்குவதில் தாமதம் காட்டி, புதைக்கப்பட்ட சடலங்களுக்கு அநீதியிழைத்து ஏராளமான சிக்கல்கள் உருவாக்கப்பட்டன.

இறந்தவர்களை புதைப்பதில் மலையக மக்கள் எதிர்நோக்கிய சிக்கல்களை மலையகச் சிறுகதைகள் எடுத்துக்காட்டியுள்ள போதிலும் அச்சிக்கல்களுக்கான தீர்வுகளை முன்வைக்க தவறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக இறந்தவர்களை புதைப்பதற்கென உரிய இடம் வழங்கப்படுதல், சடலங்களை புதைப்பதற்கு முறையான அனுமதி வழங்கப்படுதல், அவ்வனுமதி வழங்குவதில் தாமதம் காட்டாமல் விரைவான நடவடிக்கையை முன்னெடுத்தல், புதைக்கப்பட்ட சடலங்களுக்கு அநீதியிழைக்கப்படுதலை தவிர்த்தல் மற்றும் முறையான சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்வைத்தல் போன்றவாறான தீர்வுகள் முன்வைக்கப்படுமிடத்து மேற்குறித்த சிக்கல்களுக்கு தீர்வாக அமைந்திருக்கலாம்.

உழைப்புச் சுரண்டப்பட்டு அம்மக்கள் தேயிலை தோட்டங்களிலே தம் வாழ்வையும் தியாகித்து வாழ்ந்த சூழ்நிலையில், தன் வாழ்வின் இறுதியிலும் அத்தேயிலை தோட்டங்களுக்கே உரமாகிப் போன தன்மை அவலம் நிறைந்ததாகும். எனவே மலையக இலக்கியங்களிலே பேசப்படும் அரசியல், சமூக பிரச்சினைகளை அவர்களது வாழ்வியலோடு இணைத்து பார்க்கும் வேளை இவ்வாறான பிரச்சினைகளையும் கூர்ந்து அவதானிக்க வேண்டியது அவசியமாகும்.

**அடிக்குறிப்புகள்**

1. துரை விஸ்வநாதன்(பதிப்பாசிரியர்), (1997), உழைக்கப் பிறந்தவர்கள்,ப.140
2. மேலது, ப.373
3. துரை விஸ்வநாதன்(பதிப்பாசிரியர்), (1997), மலையகச் சிறுகதைகள், பக்.205-208
4. துரை விஸ்வநாதன்(பதிப்பாசிரியர்), (1997), உழைக்கப் பிறந்தவர்கள், ப.477
5. மேலது, ப.276
6. மேலது, ப.35
7. துரை விஸ்வநாதன்(பதிப்பாசிரியர்), (1997), மலையகச் சிறுகதைகள், ப.205
8. துரை விஸ்வநாதன்(பதிப்பாசிரியர்), (1997), உழைக்கப் பிறந்தவர்கள், ப.201
9. மேலது, ப.477
10. மேலது, ப.35

உசாத்துணைகள்

01. அந்தனி ஜீவா, (1995),மலையகமும் இலக்கியமும்,மலையகவெளியீட்டகம், கொழும்பு.
02. அருணாசலம், க., (1989,வைகாசி - ஆனி), “மலையகத்தோட்டத் தொழிலாளர் - ஓர் அறிமுகம்”,கொழுந்து, கொழும்பு.
03. அருணாசலம், க., (1994), மலையகதத் தமிழ் இலக்கியம், தென்றல் வெளியீட்டகம், கொழும்பு.
04. அருணாசலம், க., (1994),மலையகத் தமிழ் இலக்கியம்,தென்றல் வெளியீட்டகம், கொழும்பு.

05. அருணாசலம், க., (1997),இலங்கைத் தமிழியல் ஆய்வு முயற்சிகள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
06. அருணாசலம், க.,(1999),மலையகத் தமிழ் நாவல்கள் ஓர் அறிமுகம், குமரன் புத்தக இல்லம், சென்னை.
07. சந்தனம் சத்தியநாதன், (1999),மலையக அரசியலும் சமூக வாழ்வும், ஞானம் பதிப்பகம், கண்டி.
08. சந்திரசேகரன்,சோ. ,(1989),இலங்கை இந்தியர் வரலாறு,குமரன் புத்தக இல்லம்,கொழும்பு–சென்னை.
09. சாரல் நாடன், (1997),மலையகம் வளர்த்த தமிழ்,துரைவிவெளியீடு,சென்னை.
10. துரைவிஸ்வநாதன்(தொகுப்பாசிரியர்), (1997),மலையகச் சிறுகதைகள், துரைவி வெளியீடு, சென்னை.
11. துரைவிஸ்வநாதன்(தொகுப்பாசிரியர்), (1997),உழைக்கப் பிறந்தவர்கள், துரைவி வெளியீடு, சென்னை.
12. சாரல் நாடன், (1992.மாசி), “எண்பதுகளில் மலையக இலக்கியம்”,குன்றின் குரல், 30, புஸ்பதானமாவத்த, கண்டி.
13. மகேந்திரன், சி., (1997,தை - மாசி), “ஏழு தலைமுறைகளாக நாடற்றநிலை”,கொழுந்து, கொழும்பு.
14. சாதியா, எம். ஏ. எஸ். எப்., (2014), “தோட்டத் தொழிலாளர்களின் பிரஜாவுரிமைப் பிரச்சினையும் இந்தியாவுக்கு மீண்டும் திருப்பி அனுப்பப்படலும்: மலையகக் கவிதைகளை மையமாகக் கொண்டதோர் ஆய்வு”,களம்,இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.